

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டதை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி பருத்திப்பட்டு பகுதியில் உள்ள 416 குடும்பத்தினர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாவை சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார் உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மாநகராட்சி ஆணைய கந்தசாமி, மற்றும் சண்.பிரகாஷ், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், மற்றும் அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதகரம்” 82வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்கள் வே.வாசு, கூ.பீ.ஜெயின் உணவு வழங்கினர்!

சென்னை,மே.13-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 82 ஆம் நாளான - கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (12.5.2025) வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 97 - NMK தெரு, மார்க்கெட், சென்னை. 2) வட்டம் 97 அ -வீராசாமி மெயின் தெரு, சாலை 3வது தெரு சந்திப்பு, சென்னை. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி, அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்கள்: வே.வாசு, கூ.



பீ.ஜெயின் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு /மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமா சங்கர், சொ.முருகேசன், ப. லோகுபாபு இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# 4 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்!

## சினிமாட்டிக் ட்ரோன் பயிற்சி!

சென்னை, மே 13

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 4 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் சினிமாட்டிக் ட்ரோன் பயிற்சி வரும் 27.05.2025 முதல் 30.05.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் சினிமாட்டிக் ட்ரோன் நுட்பங்கள், வான்வழி கதையம்சம், முக்கியமான சினிமாட்டிக் ட்ரோன் ஷாட்கள் மற்றும் ட்ரோன் ரிமோட் கட்டுப்பாடுகள், சினிமா ஸ்டண்ட் காட்சிகளுக்கான ட்ரோன் ஷாட்கள், சினிமா பாடல் காட்சிகளுக்கான ட்ரோன் ஷாட்கள், சினிமா D.I. நிற ஒழுங்குபடுத்தல் மற்றும் எடிட்டிங் நுட்பங்கள், DGCA சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு குறித்த பரிசீலனைகள் மற்றும் விதிமுறைகள் போன்றவை கற்றுத்தரப்படும். அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது. தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் *www.editn.in* என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத் தாங்கல், சென்னை 600032.

முன்பதிவு அவசியம்: 9360221280 / 9543773337

அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

# தங்க நகை மதிப்பீட்டாளர் தொடர்பான பயிற்சி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே 13

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம். சென்னையில் “தங்க நகை மதிப்பீட்டாளர் பயிற்சியானது 19.05.2025 முதல் 23.05.2025 வரை ஐந்து நாட்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இந் நிறுவன வளாகத்தில் நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் தங்கம், செம்பு, வெள்ளி பிளாட்டினம் ஆகிய உலேக தரம் அறிதல் உரைகள் பயன்படுத்தும் முறை கேரட் & கேரட் (Carat & Carat) தங்கம் விலை நிர்ணயிக்கும் முறை (Board rate) ஆசிட் பயன்படுத்துதல் எடை அளவு இணைப்பான், தங்கம் (999% 916%, 85%, 80%, 75%) தரம் அறிதல் ஆபரணக் கடனுக்கான கணக்கீட்டு முறை ISரத்தினங்கள் மதிப்பீட்டு முறைகள் ஹால் மார்க் தங்க அணிகளன்கள், ஆபரண வகைகள் மற்றும் போலியான நகைகளை அடையாளம் காணுதல் அதற்காண வழிமுறைகள் ஆகியன கற்றுத்தரப்படும், மேலும், இப்பயிற்சியில் பொதுத்துறை வங்கிகள்.

கூட்டுறவு மற்றும் தனியார் வங்கிகளில் நகை மதிப்பீட்டாளர் பணிக்கு பற்றியும் அவைகளை பெறும் முறைகளை பற்றியும் ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விவாதிக்கப்படும்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் *www.editn.in* என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் (ஆண் / பெண்/ திருநங்கைகள்)18 வயதிற்கு மேற்பட்ட, குறைந்தப்பட்ச கல்வித் தகுதியாக 10ம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். பயிற்சியில் பங்குப் பெறும் ஆண் / பெண்/ திருநங்கைகள் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக குறைந்த கட்டண வாடகையில் தங்கும் விடுதி உள்ளது. தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து முன் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், இப் பயிற்சிப் பற்றிய விவரங்களை அறிய / பெற விரும்புவோர் *www.editn.in* என்ற வலைத்தளத்தில் தெரிந்துக் கொள்ளலாம். அலுவலக வேலை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம். முகவரி தொலைபேசி / கைபேசி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இ.டி.ஐ.ஐ அலுவலக சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 032. 9360221280 / 9543773337. முன்பதிவு அவசியம்

பயிற்சியின் முடிவில் அரசு சான்றிதழ் வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அண்ணாநகர் தெற்குப் பகுதி

## 107வது வட்டம் எஸ்.சபிக் ராஜா தந்தை சர்புதீன் மறைவு! கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மே 13-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி 107-வது வட்டக் கழகத்தின் துணை செயலாளர் எஸ். சபிக் ராஜா அவர்களின் தந்தையும் கழகத்தின் மூத்த முன்னோடி நெல்லிக்குப்பம் மஜீத் நினைவு மன்றத்தின் முன்னாள் செயலாளருமான சர்புதீன் அவர்கள் நேற்று (12.5.2025) மாலை இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த சர்புதீன் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (13.5.2025) மாலை நடைபெறுகின்றது.



காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் விஷார் ஊராட்சியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ”நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர், கழக கொள்கைப்பரப்பு செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மற்றும் தலைமை கழக பேச்சாளர், எம்.எல்.நாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் காஞ்சிபுரம் ஒன்றிய பெருந்தலைவர் மலர்கொடி குமார் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.மாரிமுத்து, இரா.இளஞ்செழியன் எஸ்.வி.ரமேஷ் அ.வேலுசாமி பி.என்.ரவி நா.கருணாகரன் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் எஸ்.தமிழ்செல்வன், பி.எம்.நீலகண்டன், எம்.மகாவீர்சந்த், எம்.துரைசாமி, ஆர்.வரதன் சி.எஸ்.விஜி, எம்.மகேந்திரன், க.தமிழரசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம், தாடிக்கொம்பு பேரூராட்சி. | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இராமநாதபுரம் மற்றும் சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 17.05.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | எழும்பூர் | அறிஞர் அண்ணா மாளிகை, சச்சிதானந்தம், 2–வது தெரு, கொசப்பேட்டை, சென்னை–12. |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| | | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் தெற்கு பகுதி கழக இளைஞரணி சார்பில் பகுதி அமைப்பாளர் எஸ்.சாகுல் ஹமீது ஏற்பாட்டில் பொதுமக்கள் தாகம் தீர்க்க அமைக்கப்பட்ட நீர் மோர் பந்தலை பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் சா.முஜிபுர் ரஹ்மான் முன்னிலையில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி திறந்து வைத்து நீர்மோர் தர்பூசணி கிர்ணி பழம் வெள்ளரிக்காய் பாதாம் மில்க் ரோஸ் மில்க் நுங்கு போன்றவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் மண்டல தலைவரும் பகுதி கழகச் செயலாளருமான இ.ஜோசப் அண்ணாதுரை மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி. கே. ஏ. சத்திய பிரபு பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக செயலாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.